*** திரு. என். வி. நடராசன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் காரணமாக சர்க்கார் புதிய வரிகளைக் கொண்டு வந்திருப்பதைப் பற்றி பொதுவாக நாம் ஒன்றும் ஆட்சேபிப்பதற்கு இல்லை என்றாலும், அப்படி வரிகளை அவர்கள் விதிக்கும்போது யார் யார் மீது அந்த வரிகளை விதிக்க வேண்டுமென்பதைப்பற்றி சர்க்கார் சற்று கவலை செலுத்தவேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும். இப்போது நில, நீர் வரி மூலம் சர்க்காருக்கு ஒன்றரை கோடி ரூபாய் வருவாய் வருமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 1½ கோடி ரூபாய்க்கு சர்க்கார் எத்தனை ஏழை விவசாயிகள் உற்சாகத்தை இழக்கும்படியும் பெரும் சுமையை சுமக்கும்படியான நிலைமை ஏற்படுத்துகிறார்கள் என்பதை சர்க்கார் உணரவேண்டும். டாக்டர் லோகநாதன் கூட தனது அறிக்கையில் கிராமத்திலுள்ள ஏழை விவசாயிகளுக்கு நில, நீர் வரியே கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி வரி விதித்தாலும் ஐந்து ஏக்கர் வரையில் நிலமுள்ள ஏழை விவசாயிகளுக்கு அந்த வரியை விதிக்கக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்று சர்க்கார் விதித்துள்ள இந்த வரியானது உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று இந்திய பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி விடுத்து வரும் வேண்டுகோளுக்கு ஊறு விளைவிக்குமென்று ஐயப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால் இப்போது இந்திய பிரதமர் அங்கே போர் முனையிலுள்ள நமது வீரர்கள் உற்சாகமடைய வேண்டுமென்றும் ஏர்முனையில் உள்ளவர்கள் நல்வாழ்வு பெறவேண்டுமென்றும் தினசரி முழங்கி வருகிறார்கள். போர்முனையில் நாட்டைக் காக்கும் வீரர்களுக்கு நாம் நம்முடைய உதவியையும் வணக்கத்தையும் செய்து வருகிறோம். அதே சமயத்தில் ஏர்முனையில் உள்ள விவசாயிகளுக்கு இந்த வரி மூலம் அவர்களுடைய உற்சாகத்தைக் குறைப்பவர்களாவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 1½ கோடியை வேறு துறையில் வசூலித்தால் பத்து பதினைந்து பேருக்கு அது சுமையாக இருக்கும். அதை விட்டு பல்லாயிரக்கணக்கான ஏழைகளின்மீது பெரும் சுமையைச் சுமத்துவது சரியல்ல. நாட்டிலுள்ள ஏழை உழவர்கள் உற்சாகம் இழக்கும் நிலைக்கு சர்க்கார் செல்லக்கூடாது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி இந்திய பிரதமர், போர் நெருக்கடியை மனதில் வைத்துச் சொல்லும்போது, எந்தத் திட்டத்தை வேண்டுமென்றாலும் நாம் குறைத்துவிடுவோம், ஆனால் ராணுவத்திற்கும் விவசாயத்திற்கும் மட்டும் அதிக அக்கறை காட்டுவோம் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நமது சர்க்கார் சார்பிலும் அவ்வித உறுதி அளிக்கப்பட்டது.

[திரு. என். வி. நடராசன்] [12th November 1965

ஆனால் இப்போது என்ன காண்கிறோம்? அந்த விவசாயிகளுக்குத் தான் 1½ கோடி ரூபாய் வரி விதிக்கிறார்கள். சர்க்காருக்கு தேவைப் படும் எட்டு கோடி ரூபாயையும் வேண்டுமென்றால் குறிப்பிடத்தக்க அதிக வருவாய் உள்ளவர்களுக்கும், மேல் மட்டத்தில் உள்ளவர் களுக்கும் இந்த வரியை விதிக்கலாம். போர் நெருக்கடி இருக்கும் வரையில் அதிக வருவாய் உள்ளவர்கள் மட்டும் இந்த வரியைக் கொடுக்கவேண்டுமென்று திட்டமிட்டால் எட்டு கோடி ரூபாயை சில பேர்களிடமிருந்தே வசூலித்துவிடலாம். இப்போது காலா காலத்தில் பருவமழை இல்லை. குடிப்பதற்குக்கூடத் தண்ணீர் இல்லை. சென்ற வாரம் நான் கோவை மாவட்டம் சென்றிருந்த போது அங்கே தாய்மார்கள் தண்ணீர் இல்லாமல் குடத்தை வைத்துக்கொண்டு வரிசையாக நின்றார்கள். ஏரிகள் எல்லாம் வற்றியிருக்கின்றது. குடிதண்ணீரே இல்லை என்றால் விவசாயத் திற்கு எங்கே போவார்கள்? பருவ மழையில்லை. அதுமட்டுமல்ல, மழைபெய்ய வேண்டிய இச்சமயத்தில் பனி பெய்கிறது. இந்நிலை யில் இந்த வரியை விதிப்பதானது விவேகத்தோடு செய்யப்படுகிற செயலா என்று யோசிக்கவேண்டும். இந்த 1½ கோடி ரூபாயை வேறு வகையில் சர்க்கார் வசூலிக்கலாம். பாதுகாப்புச் சட்டங்களை விதிக்கும் அளவுக்கு வல்லமையுள்ள சர்க்கார் ஏன் பஸ்களை எல்லாம் தேசிய மயமாக்கக்கூடாது, அவ்வித சட்டங்களை கொண்டு வரக்கூடாது என்று கேட்கிறேன். அதன் மூலம் 8 கோடி மட்டுமல்ல பத்து கோடி ரூபாய்கூட வருவாய் கிடைக்கும். அதன் மூலம் இந்த நெருக்கடியை தீர்க்கலாம். அதை விட்டுவிட்டு ஏழைகளுக்கு மேலும் மேலும்வரி விதிப்பது நியாயமல்ல என்று அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவ்வளவு பஸ்ஸையும் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுப் பதற்கு யார்மீது வரிபோடுவது?

திரு. என். வி. நடராசன்: பஸ் முதலாளிகள் இதுவரையில் அடித்த லாபத்திற்கு காம்பன்சேஷன் கொடுக்கக்கூடாது என்று கூட சொல்லலாம். ஏன் அவர்களுக்கு காம்பன்சேஷன்? எவ்வளவு லாபம் இதுவரை சம்பாதித்திருக்கிறார்கள்? அப்படி காம்பன் சேஷன் கொடுக்கவேண்டுமென்றாலும், பல தவணைகளில் கொடுக்க லாம். மதிப்பிற்குரிய நண்பர் திரு. அன்பழகன் அவர்கள் எனக்கு நினைவுபடுத்துவதுபோல, ஜமீன்தாரி முறையை எப்படி ஒழித் தோமோ அந்த முறையில் ஏன் இதைச் செய்யக்கூடாது? உலகம் பூராவும் சுற்றியுள்ள கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு இது தெரியாதது அல்ல. அப்படிச் செய்தால் நாங்கள் அதற்கு ஒத்து ழைக்கத் தயாராக இருக்கிறோம். காம்பன்சேஷன் என்பது மிகவும் சாதாரணமாகும். நான் ஏன் இவ்வளவு மன உணர்வோடு சொல்கிறேன் என்றால், மக்களின் உற்சாகத்தில்தான் எதிரிகளை நாம் வீழ்த்தவேண்டும். தாயகத்தைக் காப்பாற்றவேண்டும். அதற்கு அனைவரும் தயாராக இருக்கிறார்கள். பிரதமர் வேண்டு கோள் விடுத்தால் அதை உடனடியாக நிறைவேற்றுபவர்கள் கீழ்

மட்டத்தில் உள்ளவர்கள். அவர்களுக்கு இந்தத் தொல்லையைத் தரவேண்டாமென்று கேட்டு இந்த வரி விதிப்பைக் கைவிடவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIAR: Mr. Deputy Chairman, Sir, while agreeing with the Government that we should augment the revenue resources of the Madras Government, especially in view of the emergency, I am of the opinion that by all these new taxes, the agriculturists will be put to considerable hardship. I have been speaking on the floor of this House very often about the difficulties experienced by the ryots, and how the vagaries of monsoon stand in their way. Now we are facing a big famine not only in Madras State, but throughout India. Our interest, especially our Prime Minister's interest is not about the War but how to feed the hungry mouths. This is the most important problem confronting us. When we are hit hard and when we are facing a severe drought, is it desirable to introduce this surcharge on land revenue ? After all, as other Members pointed out, we are going to get only about Rs. $1\frac{1}{2}$ crores. In addition to that, we have increased the electricity charges, and the cost of production has also gone up considerably. The cost of fertiliser has gone up, the cost of pesticides has gone up, and it is not available for the ryots. The pests have caused considerable havoc to the crops and added to that, we are having this surcharge. It will no doubt, yet impose hardship on the ryots. My submission is that the Government should come forward to give liberally fertilisers at subsidised rate, and pesticides free of cost. Even though they have proposed to sink 10,000 wells, I do not think that it would be possible to sink wells before the close of the official year. Now we are in the middle of November. Within a short period it may not be possible to sink all these 10,000 wells, because we are going to have the monsoon during that period. When Sri O. P. Ramaswamy Reddiar was Chief Minister, 10,000 wells were sunk and 10,000 acres of land from Vizagapatnam to Tirunelveli were brought under cultivation, for stepping up food production. Here my another submission is that subsidy of Rs. 500 is not sufficient for sinking wells, because the cost has gone up. At least 1,000 rupees must be given for sinking of wells, as subsidy. Otherwise there will not be any incentive for the ryots to produce more. Another submission is, this surcharge on land revenue, I am sure, will be a permanent measure even though it is said it is a temporary measure.

SRI K. BALASUBRAMANYA AYYAR: Please refer to clause 6. It is going to be a permanent one.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: In that case, I request the Government to have it as a temporary measure. At the same time, if this measure is to find a place in the Statute Book permanently, I request the Government to abolish at least agricultural income-tax, Sir. That is all my submission.

* **திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் :** கனம் உதவித் தலைவர் அவர்களே, இப்போது எங்கும் மழை இல்லை; சாப்பாடு கிடைக்குமோ கிடைக்காதோ என்று கவலைப்படும் நிலையில் இருக்கிறோம். ராஜ்யத்தில் மழை பெய்திருக்கிறதா என்று பார்க்க, சென்னையைப் பார்க்கக் கூடாது. சென்னையில் 4, 5 நாட்கள் மழை பெய்திருக்கிறது. இந்த நிலையில் இந்த மசோதா கொண்டுவரப்படுவதை நான் ஆட்சேபிக்கிறேன். யுத்த நெருக்கடி இருக்கிறது ; அதனால் அரசாங்கத்திற்கு நாம் ஒத்தாசை செய்ய வேண்டியது தான். ஆனால் இப்போது சாப்பாட்டிற்கு வழி இல்லையே ! ஒத்தாசை வேண்டும் என்பதற்காக இந்த மாதிரி வரி போடக் கூடாது. நான் பேச வேண்டாம் என்று நினைத்தேன். இருந்தாலும் சொல்வதைச் சொல்கிறேன். இந்த மசோதாவைக்கீழ் சபையில் நிறைவேற்றி விட்டார்கள். நமக்கு என்ன 'ரைட்' இருக்கிறது ? இருந்தாலும் பேசுகிறேன். நான் கூறுவதை அரசாங்கத்தார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பேசுகிறேன். இன்றைய நிலையில் ஒரு குடியானவர் ஒரு ஏக்கர் சாகுபடிக்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். இப்போது விவசாயச் செலவு அதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) 'ஃபெர்டிலைஸர்ஸ்'-ஐயே முழுவதும் நம்ப முடியாது. முக்கால் பங்கு 'ஆர்கானிக் மேட்டர்' நிலத்தில் இருந்தால் ¼ பங்கு 'ஃபெர்டிலைஸர்' போடலாம். ஃபெர்டிலைஸர்ஸினால் பயிர்களுக்கு நோய்கள் வருகின்றன. பயிர்களுக்கு நோய்கள் போக மருந்து அடிக்க வேண்டியிருக்கிறது. மருந்துகளைப் போட்டாலும் பூச்சிகள் ஒழிவதில்லை. அவைகளுக்கு 'பவர் ஆஃப் ரெஸிஸ்டன்ஸ்' வந்துவிடுகிறது. இப்போது நல்ல மழை இல்லை ; எனவே இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து மழை வந்த பிறகு, இந்த வரியைக் கொண்டுவரலாம். இப்போது இந்த வரியைப் போட்டு விவசாயிகளின் கஷ்டத்தை அதிகமாக்கக் கூடாது. மத்திய அரசாங்கம் யோசனைகள் சொல்லக்கூடும். ஆனால் இப்போது மற்ற மாநிலங்களில் இந்த மாதிரி வரி விதிப்புகள் வரவில்லை. நம் மாநிலம்தான் எல்லாவற்றிலும் முந்திக்கொள்கிறது. எந்த விஷயத்திலும் மத்திய அரசாங்கத்தில் யாராவது உத்தரவு போட்டால் இந்த ராஜ்யத்தில் உடனே அது நிறைவேற்றப்படுகிறது. இந்த மாநிலத்தில் இப்போதுள்ள நிலையில் நாம் என்ன செய்ய முடியும் ? விற்பனை வரியை இன்னும் கொஞ்சம் வசூலிக்கலாம். இரண்டு, மூன்று மாதங்களுக்குப் பிறகு, மழை பெய்த பிறகு 'கமெர்ஷியல் 'க்ராப்ஸ்'-க்கு வரி போடலாம். 'க்ரெய்ன்' க்ராப்ஸ்'-க்கு ஏன் வரி போட வேண்டும் ? மற்றவர்கள் சொல்லி இந்த அரசாங்கம் கேட்காதபோது நான் இங்கே பேசி என்ன பிரயோஜனம் ?

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் : கனம் அங்கத்தினர் பெரியவர். அவர் பேச வேண்டும்.

* **திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் :** நான் இங்கே வரவேண்டாம் என்று நினைத்தேன். இருந்தாலும் வந்தேன். இப்போது எங்கும் தண்ணீர் இல்லை. இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில் ஜலமே இல்லை. மேட்டூரில் தண்ணீர் மட்டம் 6.74 மீட்டர் என்பதாக பத்திரிகையில்

செய்தி வந்திருப்பதைப் பார்த்தேன். சம்பா பயிர் பண்ணப் பட்டது. இப்போது தண்ணீர் தஞ்சாவூரில் இல்லாததால், இந்தக் குறையை நீக்க ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். 'ஃபில்டர் பாயிண்ட்' கிணறுகளை அமைக்க வேண்டும். அவ்வாறு செய்து தஞ்சாவூர் ஜில்லாவையாவது காப்பாற்றினல் நமக்கு சாப்பா டாவது கிடைக்கும். தாம்பரபரணியும் போய்விட்டது. வைகை இருக்கிறது. 15,000 கிணறுகள் வெட்டினல் ஒவ்வொரு ஊருக்கும் ஒன்றிரண்டு கிணறுகள்தான் வரும். 'ஃபில்டர் பாயிண்ட்' கிணறுகளுக்கான கருவிகளை உடனடியாக இங்கேயே தயாரித்து அந்தக் கிணறுகளை அமைக்க வேண்டும். உடனடியாக ஏதாவது நல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். டெல்டாப் பகுதிகளில் தண்ணீருக்கு உடனடியாக ஏற்பாடு பண்ணிவிடலாம். ஜல மில்லாத மற்ற இடங்கள் கெட்டுப் போகக்கூடும். இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து, மழை வந்தபிறகு, அப்போது சுபிட்சம் நிலவும் போது, 'வரி கொடு' என்றல் அழுது கொண்டாவது விவசாயி வரி கொடுப்பான். இப்போது துர்பிக்ஷம் நிலவும்போது ஏன் வரி போட வேண்டும்?

மேலும், 'ஃபாஸ்லி' எப்போது வருகிறது? அது ஜூனுக்குப் பிறகும் மார்ச்சுக்குப் பிறகும் வருகிறது.

திரு. வி. கே. ராமசாமி முதலியார்: 'ஃபாஸ்லி' ஜூலை மாதம் வருகிறது.

திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார்: கடந்த பசலிக்குத்தான் வரி வாங்கவேண்டும். சர்க்காரின் வரிக் கொள்கையே தப்பாக இருக் கிறது என்று நினைக்கிறேன். நமக்கு அதிகாரம் இருக்கிறது என்பதால் இனிமேல் வரும் காலத்திற்கெல்லாம் வரி போடக் கூடாது. இப்போதே விவசாயி சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் அழுது கொண்டிருக்கிறன். இந்த நிலையில் அரசாங்கத்தாரும் இவ்வாறு வரி போட்டால் இவர்கள் ஈரமில்லா நெஞ்சத்தார் தான். நான் அதிகமாக வேறு எதுவும் பேச விரும்பவில்லை. இத்துடன் என் வார்த்தையை முடிக்கிறேன்.

* SRI M. A. MUTHIAH CHETTIAR: Mr. Deputy Chairman, Sir, I mentioned about this even the other day when the Chief Minister made a statement about the Supplementary Budget to get Rs. 1.6 crores by surcharge on land revenue. There are two aspects of the question. As our learned former Chief Minister, who has experience in land tenure system, has rightly said, is this the time to consider this measure? There is a sentiment attached to ownership and a feeling on the part of the cultivators even in normal years to pay land revenue. Land revenue is not the biggest part of the revenue of the State now. It might have been Rs. 4 crores when the total revenue of the State was Rs. 16 crores. That was in the year 1939. To-day, it is not so. To-day, it does not form ¼ part of the revenues of the State. There are alternative revenue resources which the Government have found. 5 00 p.m.

The argument put forward that this surcharge is being levied to cope with the expenditure, cannot stand now. Sir, even during normal years, you will find, in villages, petitions for remission of land revenue are presented by the villagers and recommended by the Local Officers. The Revenue Minister, who has intensively toured in our District, knows fully well thousands of persons coming to him for remission of land revenue. Apart from the surcharge on land revenue, we must first consider whether it will be possible to collect the land revenue itself. If there is no cultivation, what do the Government do? Immediately they have to consider, as a fair Government, the request of the people to reduce the land revenue. First they put off the collection, and ask the Collector to give an assessment. Then the complaint is there that the Revenue Officials' report is not fully correct. Apart from that, even the Revenue Officials speak this year about the paucity of rains. I do not think that the cultivation is good in many places. That is the situation. There is no water. There was some rain 4 or 5 days ago, which had benefited Chingleput District only and not beyond that. Madras gets only an average rain of 25 inches when there used to be 2 or 3 cyclonic storms of short duration between October 15 and December first week. This year we had cyclone in Nagapattinam but it was weak. There may be 2 or 3 cyclones this year. Let us pray for it. It is not going to fill up Mettur or Vaigai. Therefore, we are now faced with the failure of the South-West Monsoon and also the North-East Monsoon. Therefore, how do the Government expect to collect the land revenue? What is the use of bringing this additional surcharge at this moment? There is no election in 1966. We will be having the election in 1967. It may or may not take place. But if there is election in 1967, it will be like the election in 1952. Just before the late Sri Kumaraswamy Raja laid down Office, more than a dozen Bills were put through. I opposed all of them, but all of them were passed. But what happened in the election wass they fell like a pack of cards and half-a-dozen Ministers were defeated. I am not talking politics to-day. As pointed out by our learned friend, it is impossible to expect full cultivation this year. I would ask the Revenue Minister to say whether he expects a full crop this year. How is he going to collect the normal land revenue? After all, the surcharge on land revenue will bring Rs. 1.6 crores. It may be made up in other ways. I said that sales tax could be stepped up on luxury goods and not on foodgrains. As Sri O. P. Ramaswamy Reddiar said, if good rains come, the Government may well levy the tax on commercial crops. It is possible to do so. The Government may say the Legislature is not in session. There should be no difficulty about the Legislature not being in session. The Government can summon the Legislature for the purpose or they can issue on Ordinance, and later on it can be regularised. If they want to raise the tax in December or January, they can well say in the clause that it will come into force on such and such a day. They may keep it in abeyance and if the rains come, they can levy the tax.

12th November 1965]

SRI K. BALASUBRAMANIA AYYAR: It will come into force on the 1st of July.

* SRI M. A. MUTHIAH CHETTIAR: That is because of the Fasli year commencing on the 1st of July. Therefore, the Government should postpone the measure at least till the rains come and we have normal crops. When we are not in a position to collect the normal land revenue, how is it possible to collect the surcharge on land revenue? That is my point. It is wrong to damp the sentiment of the cultivator. I would be happy if the land revenue is completely abolished all over India. It may not be much so far as our State is concerned, and they can give it up entirely. The Revenue Minister assisted by his Revenue Secretary will be able to give the correct figures. It is not at all much. If the Government say that land revenue will not be levied where rice is grown, where cereal is grown, the cultivators will not take up the cultivation of commercial crops. This will give impetus to the growing of foodgrains. That is what I would suggest when the Government are facing foreign exchange crisis even for importing foodgrains from foreign countries. Therefore, I appeal to the Government to reconsider the matter. They may get the Bill passed into law to-day, as they have got it through in the other House. The Government of the country is constituted to consider the situations as they arise and not aboue what has happened already. It is all right when they took a particular stand then, but now under the new situation, they should reconsider the whole thing. It is not too late. Therefore, I would appeal to the Government to reconsider all these taxes and give a fillip to the agriculturists to grow more with enthusiasm. 5-10 p.m.

* SRI K. BALASUBRAMANYA AYYAR: Sir, after the eloquent pleading and the elderly advice of the earlier speakers, Sri O. P. Ramaswami Reddiar and Raja Muthiah Chettiar, I have nothing to say except that this is a very wrong thing. Everybody knows that the farmer has to carry on his duty with patience, industry, skill, and a good deal of faith in the seasons. Otherwise, he will not succeed. Therefore, if any measure is introduced which will frustrate him, which will damp his enthusiasm, I think we would have done a great harm to the attainment of self-sufficiency in the matter of food in our country. (Sri O. P. Ramaswami Reddiar: We will be condemning ourselves.) Therefore, it is I say, that this measure is an unfortunate measure, at the present juncture especially. Surcharge of 25 per cent is to be levied on land revenue and water cess also. The surcharge is on the combination of both. Added to this, there is the power of the panchayat union to levy a cess. They have levied it already. In the budget memorandum I saw, they had collected last year more than Rs. 3 crores on cess. If these things are taken into consideration, this will be a heavy charge. Another curious thing is there was a revenue surcharge in 1954 or 1955 and they say in the budget memorandum that the revenue from this was Rs. 80 thousands.

Sir, one of the objects mentioned in the Statement of Objects and Reasons is " for the development of roads and development of villages ". What for do the Panchayat Unions exist? It is for the development of roads and other things. That is why they collect the cess. In addition to that, why should the Government want this additional surcharge? There is no object at all. It is all wrong.

Then, again, Sir, in the Statement on Resources it is said: " On the whole, as against about Rs. 151 crores anticipated over the Fourth Plan Period on the existing pattern of sharing of Central taxes and Grants-in-aid, it is estimated that this State will receive, by way of statutory devolution, about Rs. 207.3 crores over the next five years in pursuance of the recommendations of the Fourth Finance Commission ". From this it is clear that Rs. 56 crores more will be added to our resources. That fact should have been taken into consideration in this connection.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir this Rs. 56 crores is to meet the increased expenditure in the Third Plan. Certain plan expenditure in the Third Plan becomes committed expenditure in the Fourth Plan. We have given increased pay, D.A. and so on. All this expenditure which was plan expenditure under the Third Plan will become committed expenditure in the Fourth Plan and this increased grant of Rs. 56 crores goes to make up the committed expenditure. That is all the recommendatión of th Finance Commission.

SRI K. BALASUBRAMANYA AYYAR : We can alter figures and we can use them for this purpose or that purpose. I do not want to argue the point. Our resources position is not bad. On the other hand, it has to some extent improved. We had a deficit of seven crores of rupees in the last budget and yet there was no taxation. Now because the Central Government and the Central Finance Minister said that the resources should also be augmented by the States, they are doing this as the hon. Member Sri O. P. Ramaswami Reddiar put it.

Sir, they have introduced this measure at a most unfortunate time. The seasons are had. There can be no expectation of the North-East Monsoon rains coming. There is little chance of the rains coming in large quantities. We can only pray to God and hope the rains would come. I do not think that God would be unkind to Tamilnad. That apart, the situation in which we are is precarious and there is no doubt about it and now to levy a surcharge on land revenue and water cess is very heavy and absolutely heavy.

Then, what are the expenses that the farmer is put to? That is another very important matter. The price of cattle has gone up very much, twice, thrice and even four times. The price of everything connected with cultivation has gone up. What will

the farmer do? He has to produce foodgrains of course. But the cost of every other thing has gone up. The farmer has to live and, therefore, his expenditure also should be taken into consideration. Every change in the price structure affects his position, his expenses increase terribly and he is not able to make both ends meet. (Interruption). If he does it, he will not get the food he is getting. That is why he is patient and goes on working and doing everything like his bullocks. He is quite patient. If he agitates, he will lose even the chance of having the foodgrains for the particular year. And then the farmer has to be vigilant at the time of the agricultural operations. He has no time left for agitations and that is why we do not hear his cry. Even if he has to cry, he has to cry in silence.

Now, Sir, I have said very often and say it again that these land reforms have disturbed the agricultural economy and put it out of order. Conflicting statements are made by Ministers and officials at the Centre about agriculture and our self-sufficiency in the matter of food. Today the Central Food Minister says: 'There is great difficulty in the matter of food. The unfortunate thing about agricultural statistics is that they are very poor and inaccurate. And nobody can give an accurate account of the expenditure, gain and so on involved in agriculture. That is also another difficulty that we labour under. (An hon. Member: They have the Government farms.) There they do not care for the income or expenditure. They only show the stalk and say how beautiful it is. What was the expenditure, what was the income, was it economical on the whole, these they are not bound to mention. And again they have good cattle, good seeds, ADT seeds and other things. How far they are economically used we cannot say. They may not have an income at all and the farmers cannot manage their cultivation as they do in the Government farms. Then, Sir, as was mentioned by Sri Ramaswami Reddiar, we talk about fertilizers often forgetting that organic manures alone will be helpful. Because of the application of these chemical fertilizers, we are faced with the difficulty of these pests and so on. Fertilizers alone will not solve the problem.

There are all these difficulties and that is why I would appeal to the Hon. Minister as the elder statesmen have appealed that he should wait for the opportune time to have the surcharge if he cannot give it up altogether. Some hon. Members seem to feel that this is a temporary measure. I would like to draw their attention to the provision here which says: "The surcharge assessed under this Act shall remain in force so long as the land revenue or the water cess for the land remains the same". Therefore, the surcharge seems to be a longstanding measure and there is no chance of getting away from it. (Interruption). That is why we are anxious to oppose this tooth and nail and with all the vehemence we can command on behalf of the poor farmers, on behalf of ourselves and also the Government because they should also be fed. Otherwise, they cannot carry on

the Government and the administration at this particularly difficult time. As I said earlier, it is defence effort. In the situation in which we are now in the country, to work for the production of more food is itself a great defence effort. When that is so, even for the sake of this emergency, I would appeal to the Government to drop this measure.

* DR. H. V. HANDE : Mr. Deputy Chairman, I wish to offer a few remarks on this measure which provides for the levy of a surcharge on land revenue. Before I refer to the tax itself, I would like to discribe the tragic situation in which our farmers have to eke out their livelihood since we attained independence. The farmers are the most downtrodden people in our State today. They have no agency through which they could voice their feelings. With their plough they have to toil throughout the day. If the Government were to re-examine the whole position, I am sure they might have to shift their stand on this question. This levy of surcharge, I am afraid, has been brought forward at the
5-20 p.m. most inopportune moment. The farmer has had several troubles from the Government. This is the last straw on the camel's back. With this levy, we have come to the saturation point where we cannot levy any further penalties on him. We cannot give further trouble to him. To that extent, I am afraid, the Government have been exercising control over the farmers. I beseech the Hon. the Chief Minister and the Hon. the Miinster for food to reconsider the Bill and, if necessary, send it back to the lower House for reconsideration by that House.

There is one other point that I would like to make. Let us imagine that we put a higher levy of tax on any other trade. The trade will transfer that tax to the consumer. But the farmer can never pass on the tax that is imposed on him to the consumer, because the farmer comes at the dead end. He cannot transfer the tax to the consumer. That is the point I would like to make. Whether it is the cinema or any other trade, if we put a tax on them, they will pass it on to the consumer invariably. It is passed on to a greater degree than even the businessman is taxed. But this is not possible in the case of the farmer, because there is the price control. There is the maximum price and the minimum price. All sorts of restrictions are put on the poor farmer. That is why I once again beseech the Hon. the Chief Minister to reconsider this Bill.

We have committed another mistake. For the past eigthteen years, we have not introduced a single measure of an incentive factor into the farmer. Every measure that we have introduced has been disincentive. I would like the Government to introduce an incentive into the farmer. There has been the argument that the tax that is levied is only a small tax and only Rs. 1½ crores would be got. It is said that in a State which has a revenue of nearly Rs. 175 crores annually, this Rs. 1½ crores extra levy is only a small one. What I would like to stress is that

this is not a question of Rs. 1½ crores. It is not a question of the amount being small. It is a question of disturbing the psychology of the farmer. The farmer is already groaning under innumerable troubles. By the imposition of this surcharge we may not arithmetically be causing much trouble to the farmer. But still what happens to the farmer's psychology? He is already downtrodden. What will he feel when the Government are against him? How bitterly he will feel? I request the Hon. Minister to consider this point.

One more point, Sir. We had a very fine cry—an excellent slogan given to the whole country by our beloved Prime Minister. The slogan is "Jai Kisan". This was started thirty years ago by Professor N. G. Ranga, the leader of the Opposition in the Lok Sabha. This is a wonderful slogan. I fully subscribe to this slogan. Let us implement this fine slogan that has been revived by our beloved Prime Minister. Let us rise to the occasion and let us not curb the enthusiasm of the kisans. Let us bear in mind the words of the Prime Minister and try to waive this Rs. 1½ crores of surcharge.

Finally, I would like the Hon. Minister to take note of what the Deputy Leader of the Opposition said. As he said, the most important thing now is defence effort. Any army marches on its belly. We must remember that unless we produce enough food in our country, we can never fight effectively. To keep the jawans in good humour, and to keep them in good state of mettle, the most important national effort is to see that we step up our production of food. That is our bounden and sacred duty. Whatever measures we may bring in must not affect the production of foodgrains and must not upset the target that we have set for ourselves. It is imperative that we should produce more. It is imperative ....

DEPUTY CHAIRMAN : The hon. Member will please finish soon. There are a number of Members who want to speak on this Bill.

DR. H. V. HANDE : Only two sentences more, Sir. All that I say is, "let us try to keep our targets." If we do not do it, and if we bring in this measure, I am afraid that it may even be considered an anti-national measure. With these words, Sir, I wind up.

DEPUTY CHAIRMAN : I now fix a time-limit of five minutes for each speaker. Sri M. Sankaralingam Pillai will now speak.

* **திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** கனம் உதவித் தலைவர் அவர்களே, நமது நாட்டின் இன்றைய நிலையில் நம் மானத்தைக் காப்பாற்றி வருபவர்கள் இருவர். போர்முனையில் எதிரிகளின் தாக்குதலுக்கு தன் உயிரை அர்ப்பணித்து நம் நாட்டின் மானத்தைக் காத்துவருபவர், போர்வீரர். உள்நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உயிர் கொடுக்கும் விதத்தில் உணவு கொடுக்க ஏர்முனையில் கடும் வெயிலின் கொடுமையின் மத்தியில் நின்று நம் மானத்தைக் காத்துவருபவர், உழவர். யுத்த

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [12th November 1965

வீரர்களுக்கு அவர்களுடைய சம்பளத்தில் 25 சதவிகிதம் வரி போட்டால் அது எப்படி இருக்குமோ அப்படித் தான், விவசாயி களுக்கு 25 சதவிகிதம் அதிகமாக வரி போடுவதும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். உண்மையில், நமது அரசினர் விவசாயிகளின் இன்றைய நிலையை சரியாக உணரவில்லை. ஏதோ சில புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு அவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்று நினைத்தே இந்த வரியை இந்த அரசினர் போடுகிறார்கள் என்று நினைக்கிறேன். இன்று சமூகத்தில் கடை நிலையில் புழுக்களாக இருக்கிறார்கள் விவசாயிகள் என்பதை நாம் உணர வேண்டும். நாம் அவர்கள் உற்பத்தி செய்யும் உணவை உண்டு மகிழ்ந்து இந்த மன்றத்திலும் மற்ற இடங்களிலும் இருக் கிறோம். நாம் மனம் புழுங்க வேண்டிய நிலையில் அவர்கள் இன்று இருக்கிறார்கள். அவர்களுக்கு வரி போடக்கூடிய நிலையில் அவர்கள் இன்று இல்லை. இன்றைய நிலையில் உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயியின் தொல்லை அளவிடற்கரியது. நெல்லை உற்பத்தி செய் தால் ஏக்கருக்கு 15 மூட்டை நெல்லைக்கூட விளைய வைக்க முடியவில்லை. அதையும் கண்ட்ரோல் ரேட்டுக்குக் கொடுத்து விட்டால், அதற்குப் பிறகு எங்குபோய் என்ன செய்வது என்றே தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். அதற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. மற்ற வியாபாரப் பொருள் விவசாயம் இருக்கிறது. அது நமது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஏனென்றால் அதிலே வரி போட்டால் எதிர்க் கிளர்ச்சி இருக்கும், அதிகமாக இருக்கும் செல்வந்தர்களைப் பாதிப்பதால். இது ஏழை விவசாயி களைப் பாதிப்பது. அவர்களுக்கு வரி போட்டால், அவர்கள் சார்பிலே சட்ட மன்றத்திலே குரல் எழும்புகிறதே தவிர, அவர்கள் மத்தியிலேயிருந்து குரல் எழும்புகிற அளவுக்கு உருவாக்கக்கூடிய பொருளாதார நிலைமை இல்லை. ரப்பர் பயிர் இருக்கிறது. மிளகுப் பயிர் இருக்கிறது. தென்னைப் பயிர் இருக்கிறது. புகையிலைப் பயிர் இருக்கிறது. கரும்புப் பயிர் இருக்கிறது. இதற்கு எல்லாம் வரி போடாமல் நெற்பயிர் செய்கிற விவசாயிகளுக்குத் தண்ணீர் வரியோடு அதிகவரி போடுவது நம்மை நாமே அழித்துக் கொள்கிற ஒரு வழியே தவிர ஒன்றும் இல்லை என்றுதான் கருதுகிறேன். எனவே இந்தச் சட்டம் இங்கே நிறைவேறினாலும்கூட அமுல் நடத்துவதிலே நமது அரசினர் மிக எச்சரிக்கையாக இருந்து நெல் விவசாயிகளுக்கு மானியம் வழங்கவேண்டும். ஏக்கருக்கு 12 ரூபாய் மானியம் வழங்கப்படுமானால் நெல் விவசாயம் இருக்கும். சில நாட்களுக்கு முன்னால் உள்துறை அமைச்சர்கூட ஒரு
5-00 p.m. மாவட்டத்திலே நெல்லிலே இருந்து கரும்புக்கு மாறி இருக்கும் நிலம் எவ்வளவு என்று சொல்லத் தெரியவில்லை; அதைக் கணக்கு எடுக்கவும் முடியவில்லை என்று சொன்னார்கள். விவசாயத் துறை யிலே இருக்கிற புள்ளிவிவரம் எவ்வளவு தவறானது, எவ்வளவு தெளிவாக இல்லாமல் இருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்து கொள்வதற்கு இது ஒரு வழியாக அமைகின்றது. எனவே விவசாயி களைக் காப்பாற்றுவதன் மூலம் தான் நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள முடியும். உணவு உற்பத்தியைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும். எனவே நெல் விவசாயம் செய்கின்றவர்களுக்கு எல்லா

12th November 1965] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

உதவியும் அளித்து மானியம் வழங்கவேண்டும் என்ற நிலையில் இருக்கிறோம். மாறாக வரிபோட்டு உயர்த்துகிறோம். அது நம்மை எவ்வளவு பாதிக்கும் என்பதை அரசியலில் எல்லாத் தரப்பிலே இருந்தும் சொல்கின்றவர்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து அமுல் நடத்துவதிலே விரிவாக அமுல் நடத்தாமல் தருணத்திற்கு ஏற்றபடி மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

* திரு. கே. வி. ராமசாமி : சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவசாயிகளுக்காக ஏற்பட்டிருக்கும் சர்சார்ஜ் விஷயத்தைப்பற்றி பல நண்பர்கள் இந்த மன்றத்திலே பேசியாகி விட்டது. ஆனால் எல்லோரும் விவசாயிகளுக்குப் போடக்கூடிய வரியானது தற்சமயத்தில் ஏற்றதல்ல என்ற கருத்துடனேயே பேசி யுள்ளார்கள். ஆனால் நான் ஒன்று கூற ஆசைப்படுகிறேன். விவசாயி பட்டினியிருந்தாகிலும்கூட இந்த நேரத்தில் தன்னுடைய உயிரைக் கொடுப்பதற்கு சித்தமாக இருக்கிறான் என்ற கருத்து இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் விவசாயியே தனக்கு விளையக் கூடிய நேரத்திலே தனக்கு வரி அதிகமாக ஆகிவிட்டது என்ற கருத்து ஏற்படாதவண்ணம் நமது மதிப்பிற்குரிய சர்க்கார் விவசா யிகளுக்கு வேண்டிய நல்ல நிலைமைகளை உண்டுபண்ணவேண்டும். அவர்களுக்கு அந்தக் கருத்து மாறுபட்டு அவர்களுக்கு உணர்ச்சி வேகம் ஏற்படவேண்டும். அந்த நிலையை உண்டுபண்ணவேண்டியது நம்முடைய சர்க்காரின் கடமையாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் விவசாயி இதையெல்லாம் பொருட்படுத்தமாட்டான். விவசாயிக்கு பல உபத்திரவங்கள் இருக்கின்றன. அந்த உபத்திர வங்கள் முதலிலே நீங்கவேண்டும். விவசாயிக்கு இருக்கக்கூடிய பல கஷ்டங்களை இந்த மன்றத்திலே நான் எடுத்துக் கூறி இருக் கிறேன். அவர்களுக்கு முதலிலே கவுரவம் வேண்டும். அதிகாரி களிடத்தில் சென்றால் மரியாதை வேண்டும் என்பதைச் சொல்லி யுள்ளேன். அதுபோல இன்றைக்கு சில இடங்களிலே எப்பொழு தோ லோன் கொடுத்திருக்கிறார்கள். அந்த லோனை பல நாட்கள் விட்டுவிட்டு திடீரென்று அதற்கு உடனே ஜப்திக்கு ஏற்பாடு செய்கின்றார்கள். உதாரணமாக நமது சட்டமன்றத்திலே இருக்கக் கூடிய நமது மதிப்புக்குரிய திரு. ஜானகிராம முதலியார் விஷயம் கூட இன்று இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஏதோ லோன் வாங்கி அதற்கு சிறுகச் சிறுக பணம் கட்டியும் உள்ளார்கள். அப்படி இருந்தும் இவ்வளவு காலத்துக்குப் பிற்பாடு இப்பொழுது அது ஜப்திக்குகூட வந்திருக்கிறது என்று நேற்றைய தினம் என்னிடத்திலே சொன்னார். இந்த மாதிரி விவசாயிக்கு எந்த விதத்திலேயும் ஏன் ஜப்திக்கு வந்தது என்று தெரியாத முறையிலே கூட இருப்பதைப் பார்க்கிறபோது வருத்தம் ஏற்படுகிறது.

அதேபோல, என்னுடைய கிணறு 3 வருஷத்துக்கு மேலாகிறது. அதற்கு இப்பொழுது மினிமம் சார்ஜ் போட்டு பில் வந்திருக்கிறது. அதற்கு எப்பொழுதுமே மினிமம் சார்ஜ் கிடையாது. இந்த மாதிரியான நிலைமைகள் எல்லாம் வரும்போது விவசாயிக்குக் கஷ்டம் ஏற்படும். வரி 100-க்கு 25 என்று இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 5 ரூபாய் இருக்கிறது என்றால் அவர்களுக்கு 25%, 1¼

ரூபாய் சேர்ந்து 6¼ ரூபாய் வருகிறது. இந்த 6¼ ரூபாய் ஒரு எறும்பு கொண்டு போகிற அளவு இல்லை. ஒரு விவசாயிக்கு நல்ல விளைச்சல் இருக்கிறபோது ஒரு கள்ளன் நாலு பக்கத்திலே இருந்து திருடிக்கொண்டுபோகிற அளவு இல்லை. இதையெல்லாம் பொருட்படுத்தமாட்டான். விவசாயி எப்பொழுதும் தேசத்துக்காக தன்னுடைய உயிரைக் கொடுப்பதற்குத் தயாராக இருந்து கொண்டு இருக்கிறான். அப்பேர்ப்பட்ட ஒருவனுக்கு நாம் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்யாமல் இருந்துகொண்டு இருக்கிறோமே என்பதை இந்த மன்றத்திலே பல தடவை பேசியிருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். ஆகவே வரியைப்பற்றிக் கவலை இல்லை. விவசாயிகளின் உழைப்புக்கு ஏற்ற ஊக்கத்தைக் கொடுக்க வேண்டியது நமது சர்க்காரின் கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பல தடவை பயிர் இன்ஷூரன்ஸ் வேண்டும், வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதைக் கொண்டுவரவே இல்லை. அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எவ்வளவோ பேர் இருக்கிறோம். எனவே அதையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நேரம் அதிகமாக நான் எடுத்துக்கொள்ள ஆசைப்படவில்லை. ஆகவே இந்த வரியைப்பற்றி நான் அதிகம் என்று கூற ஆசைப்படவில்லை. விவசாயிகளுக்கு கிணறுவெட்ட மானியம் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கவேண்டும். தண்ணீர் இல்லாத இடத்துக்குக் கிணறுவெட்ட நிறைய பணம் கொடுத்து ஆதரவு கொடுத்தால் நல்ல முறையிலே இந்த வரியைப் பற்றி லட்சியமே செய்யமாட்டார்கள். ஆகவே இப்பேர்ப்பட்ட விஷயங்களிலே நல்ல ஆதரவு செய்வார்கள் என்று நம்பி நான் இதை ஆதரிக்கிறேன்.

***திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்:** தலைவர் அவர்களே, இந்த வரி அதிகமாக இருக்கிறது. பெரும்பாலும் காங்கிரஸ் காரர்கள்கூட ஆட்சேபனைதான் பண்ணுகிறார்களே தவிர ஆதரிக்க வில்லை. வரி போடுவது சர்க்காருக்கு சகஜமாக இருக்கிறது. எருதுக்கு இருக்கிற நோய் காக்காய்க்குத் தெரியாது. அது போல விவசாயி விஷயம் இந்தக் காக்காய்க்குத் தெரியவில்லை. இப்பொழுது நடக்கிற விவசாயம் எப்படி இருக்கிறது என்றால் மழையே இல்லை. ஐப்பசி மாதம் தீர்ந்துவிட்டது. இன்னும் 15 நாட்கள் தான் இருக்கின்றன. இதற்குள்ளே மழை பெய்தால்தான் போயிற்று. கார்த்திகை மாதத்திலே மழை பெய்யாது. 40 வருஷமாகத் தெரியும். கார்த்திகை மாதத்திலே முதலிலே மழை பெய்யும். அதற்குப் பிறகு மழையே நின்று போகும். விவசாயத்திலே கொள்முதல் செலவு ஜாஸ்தி. கூலி ஜாஸ்தி. மனிதன் 2 ரூபாய் தின்றால் மாடு 4 ரூபாய் தின்கிறது. இங்கே சொல்லவில்லை. நான் கிராமத்திலே சொல்கிறேன். புண்ணாக்கு எல்லாம் இப்பொழுது விலை ஏறிவிட்டது. மாட்டை வைத்துத்தான் பயிர் செய்ய வேண்டும். மனிதனைக் காட்டிலும் மாட்டிற்குச் செலவு அதிகம் ஆகிறது. மாட்டை விற்றுவிடலாம் என்றால் வாங்கு

12th November 1965] [திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார்]

வதற்கு ஆள் இல்லை என்கிறார்கள். ஏதோ பம்ப்செட் வைத்துக் கொண்டிருப்பவர்கள் பயிர் செய்கிறார்கள். காரிலே போகிற போது நன்றாக இருக்கிறது, விவசாயி கொழுத்துக்கொண்டு போகிறான் என்று சொல்கிறார்கள். நஷ்டம் இல்லை. லாபம்தான் என்கிறார்கள். இரண்டு யூனிட் 14 சத விகிதத்துக்கு வாங்கி 10 சத விகிதத்துக்குத்தான் கொடுக்கிறோம் என்று மந்திரி சொல்லி இருக்கிறார். யூனிட் 10-க்கு கொடுத்தால்கூட கட்டாது. ஐந்து ஹார்ஸ் பவருக்கு 30, 35 ரூபாய் கரண்டு சார்ஜு கட்டிக் கொண்டிருந்தோம். இப்போது 80, 90 ரூபாய் ஆகின்றது. எல்லாம் ஜாஸ்தியாகிவிட்டது. நெல்லை நாங்கள் இஷ்டம் போல் விற்பதற்கு விடுகிறார்களா? அதற்கு கண்ட்ரோல். அது தான் இருக்கிற விவசாயிக்கு ஆபத்து. மழை பெய்யவில்லை என்றால் மண்ணைச்சாப்பிட்டுப் பிழைக்கலாம். வைஷ்ணவ புராணத்தில் ஒரு பக்தர் மண்ணைத் தின்று பிழைத்தாராம். மழை பெய்யா விட்டால் என்ன செய்வது? விவசாயிகளுக்குச் செலவு ஜாஸ்தி. உற்பத்தி ஆகிற சரக்கை இந்த விலைக்குத்தான் விற்கலாம் என்றும் தன் இஷ்டம் போல் விற்கக் கூடாது என்றும் ரெவின்யூ டிபார்ட்மெண்டு யாருக்குச் சொல்லுகிறதோ அவருக்குத்தான் விற்க வேண்டும். எனக்கு சுதந்திரம் கிடையாது. என் இஷ்டம் போல் விற்க விடுகிறார்களா? அதையும் பிடித்து இதையும் பிடித்தால் எப்படி ஓடும் மாடு? மாட்டைக் கட்டிப் போட்டு விட்டு ஏன் அடிக்கிறீர்கள்? முன்னுக்குப் பின் முரண். நிர்வாகச் செலவில் சிக்கனம் செய்யுங்கள். என், பணம் இல்லை என்றால், ஒரு 10 கோடி ரூபாய் லோன் வாங்கிக் கொள்வது? விவசாயி கையில் பணம் இல்லை என்றால் கடன் வாங்கவில்லை? வரி போட முடியாத காலத்திலே கடன் வாங்கிக் கொள்ளவேண்டும். முடியுமானால் எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். வேண்டாத பெண்டாட்டி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பது. இருக்கிற கஷ்டம் அதுதான். வேண்டாத பெண்டாட்டி விவசாயிகளுக்காகப் பாடுபடுகிறோம் என்று பேசுவதுதான். என்ன அவர்களைக் காப்பாற்றுகிறீர்கள்? ஒன்றும் கிடையாது. பருத்திக் கொட்டை என்ன விலை விற்கிறது? பெரியவர்கள் மந்திரிகள் பேசுகிறார்களே என்று கை தூக்குகிறோம். இந்த மாதிரி சர்க்காரை, தொந்தரவு பண்ணுகிற சர்க்காரை வள்ளுவர் சொன்னார், வழி மடக்கி அடிப்பதுபோல அதிகமாக கொடுமையாக வரி போட்டு ஜனங்கள் கஷ்டம் தெரியாமல் வசூல் பண்ணினால் அது வழி மடக்கி அடிக்கின்ற சர்க்கார் என்று சொன்னார், அந்தக் காலத்திலே, தயவு செய்து அந்த மாதிரி சர்க்கார் ஆகாமல் நல்ல சர்க்கார் ஆவதற்கு வழி பண்ணுங்கள், எவ்வளவு சொன்னாலும் அவ்வளவுதான். திருப்பித் திருப்பி இதைத்தானே பேசப் போகிறேன். நீங்கள் குறைக்கப் போவதில்லை. நானும் பேச எழுதி வைத்தேன். பேசினால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. ஏதாவது காரியம் நடப்பது போல இருந்தால் பேசுவது சரிதான். பெரியவர் ஸ்ரீ. பால சுப்பிரமணிய அய்யர் சொன்னார். நல்லதைச் சொன்னார். நானும் வயதில் அந்தக் கணக்கில்தான் இருப்பேன். அவர் பேச்சைக் கேட்பது இல்லை. நீங்கள் யார் பேச்சைக் கேட்கிறீர்கள்?

5-40 p.m.

[12th November 1965

* **திரு. எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, இன்று நில வரி சர்சார்ஜ் மசோதாவை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நில வரி சர்சார்ஜ் மசோதாவை கீழ்ச் சபையிலும் சரி, இங்கேயும் எல்லோரும் எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர்த்துப் பேசிக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆகையால் அந்த மசோதாவிலே பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாலே ஏற்பட்டிருக்கும் விளைவுகளையொட்டி நமக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை எல்லாம் நிவர்த்தி செய்வதற்கும் அதை சமாளிப்பதற்கும் இம்மாதிரியான ஒரு வரியைப் போடுவதற்கு நம் அரசாங்கம் முன் வந்திருக்கிறது. ஆனால் இந்த வரியானது விவசாயிகளுக்கு அதிகம், அவர்கள் குறைவுறுகிறார்கள் என்று சொல்லுவதெல்லாம் சரியல்ல. சென்ற வாரத்திலே கூட இந்த வரிகளைப் போட இருக்கிறார்கள் என்று நாங்கள் விவசாயிகளை சந்தித்தபோது விவசாயிகள் சிலர் சொன்னார்கள். இந்த வரி அதிகமானதல்ல. ஒரு விவசாயி 10 ரூபாய் வரி கட்டுகிறான் என்றால் அவன் கட்ட வேண்டிய வரி 2½ ரூபாய் தான் அதிகம். ஏழை விவசாயிகள் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் 3 ஏக்கர் வைத்திருப்பவர்கள் இதில் ஒரு காலும் பாதிக்கமாட்டார்கள். 3 எக்கருக்கும் மொத்தம் 12 ரூபாய்க்கு மேல் அதிகம் இல்லை. 20 ரூபாய் வரி கட்டுபவர்கள் கூட ஐந்து ஏக்கருக்கு அவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 4 ரூபாய்க்கு மேல் வரப் போவதில்லை. இதனால் விவசாயிகள் கஷ்டப்படவில்லை. கஷ்டப்படுகிறவர்கள் யார்? எப்போதும் இந்த மன்றத்திலும் சரி அல்லது அந்த மன்றத்திலும் சரி வரியை ஆதரித்தவர்கள், வரி போடுவதை ஆதரித்தவர்கள் இருக்கிறார்களா? வரி போடாமல் எப்படி பரிபாலனம் செய்வது என்று பார்க்கவேண்டும். விவசாயிகள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இந்த நேரத்தில், இந்த சண்டை வந்திருக்கிற நேரத்தில் உடல், பொருள், ஆவி அத்தனையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி என்.ஜி.ஓ.-க்கள், மற்றவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் 60 லட்சம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். மீதி இருப்பவர்கள் 2 கோடி 40 லட்சம் பேர்கள் இந்த வரியால் பாதிக்கப்படவில்லை. பார்க்கப்போனால் விவசாயிகள் மூலம் மொத்தம் 12 கோடி ரூபாய்தான் வரி வருகிறது. அதிலே 25 சதவிகிதம் என்று சொன்னால் 3 கோடி ரூபாய் வரவேண்டும். அப்படி வரவில்லை. 1½ கோடிதான் வருகிறது. நிலத்தைத் தரமாகப் பிரித்து அதிக விளைச்சல், குறைவான விளைச்சல் என்பதை பார்த்து வரி குறைக்கப்பட்டிருக்கிறது. மூன்று போகம் விளைகிற நிலங்கள் தஞ்சாவூரில் இருப்பதால் வரி அங்கே அதிகமாக இருக்கிறது. தென்னாற்காடு ஜில்லாவிலே ஒரு எக்கருக்கு 10 ரூபாய் வரி என்றால் 2½ ரூபாய் அதிகம் வரி வருகிறது. எல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும் போது 1½ கோடிக்கு மேல் வரவில்லை. இது அதிகமான வரி என்று சொல்லமுடியாது. இந்த வரி விவசாயிகளை ஒருக் காலும் பாதிக்காது என்று நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். விவசாயிகளை நாங்கள் சந்திக்கவில்லையா? தென்னாற்காடு ஜில்லாவிலே நான் குறிப்பாகச் சொல்லுகிறேன். வீர ஜவான்

12th November 1965] *[திரு. எம். எத்திராஜுலு]*

களுக்கு நிவாரணம் கொடுக்கவேண்டும் என்று கலை நிகழ்ச்சி நடத்த ஐந்நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் டிக்கட்டு கொடுக்கிற நேரத்திலே சந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டார்கள். எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் எங்களிடம் இருக்கும்வரை யுத்த நிதிக்காக கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்றார்கள். அதே போல இந்த வரியை விவசாயிகள் சந்தோஷத்துடன் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். இந்த வரி நிரந்தரமாக இருக்காது. நிலைமை கொஞ்சம் சரியானதும் முதலமைச்சர் இந்த சர்சார்ஜை எடுத்துவிடுவார் என்று நினைக்கிறேன். சின்ன வரியை பிரமாதப் படுத்தி வரி போட்டு விட்டார்கள் என்று எதிர்கட்சி அங்கத் தினர்கள் பிரச்சாரம் செய்வது, எதிர்காலத்தை திட்டம் போட்டு எதிர்க்கிறார்கள். இதை விட்டால் வேறு சொல்ல இவர்களுக்கு வழி இல்லை. இந்த ஒன்றைத் தவிர குற்றச்சாட்டுக்கு வேறு என்ன இருக்கிறது? விவசாயிகளுக்கு சர்க்கார் என்னென்ன உதவி செய் கிறது என்று பார்த்தால் கிணறுகள் வெட்ட 3 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறது. ஒரு விவசாயிக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றால் உடனே கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் சர்க்கார் செய்து கொடுக்கிறது. சர்க்கார் எல்லா உதவியும் செய்யும் நேரத்திலே $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு வரி போட்டதை மிகைப்படுத்தி வேறு விதமாக அதைத் திருத்திக் கூறி களங்கம் ஏற்படுத்துவது எதிர்க்கட்சிகளுக்கு நல்லதல்ல என்பதை எச்சரிக்கிறேன். இந்த வரி அதிகம் இல்லை என்று விவசாயிகள் வரவேற்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கொடுப் பதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து சொல்லுகிறேன். எப்போதாவது எதிர்கட்சி அங்கத்தினர்கள் எதையாவது இந்த மன்றத்தில் ஆதரித்து இருக்கிறார்களா? இந்த வரியை ஒப்புக்கொள்வதற்கு. சர்க்கார் போட்ட வரியை ஒப்புக் கொள்ளவில்லை என்று சொன்னோம். அதே நேரத்தில் சபையை விட்டு வெளியேறிவிட்டோம் என்று பொது மக்களிடம் சொல் வதற்காக இதை ஒரு காரணமாக வைத்து இங்கே பேசப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. இந்த வரி பொருத்தமான வரி. இந்த வரியைக் கொண்டுதான் கிராமங்களுக்கு மேலும் நல்ல பல காரியங்களைச் செய்யவேண்டுமென்று அரசாங்கம் விதித்திருக் கிறது. இந்தச் சண்டை வந்தால் நாம் செய்யவேண்டிய பல காரியங்கள் தடைப்பட்டு இருக்கின்றன. ரோடுகள் போடவில்லை, பள்ளிக்கூடங்கள் கட்டுவதை நிறுத்தியிருக்கிறோம். இந்தப் பணத்தை நகரத்திற்குக் கொண்டு போய் செலவு செய்யப்போவ தில்லை. ஆனால் கிராமங்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளான ரோடு போடுதல், சாலை அமைத்தல், மின்சாரம், பள்ளிக்கூட குழந்தைகளுக்குச் சாப்பாடு, உரம் வாங்கி கொடுப்பது போன்ற முதலிய வேலைகளுக்குச் செலவு செய்யப்போகிறார்கள். இந்த வரியைக் கண்டு யாரும் ஆத்திரப்படவேண்டியதில்லை. கவலைப்பட வேண்டியதும் இல்லை. நிச்சயமாக இந்த வரியை விவசாயிகள் ஒப்புக் கொள்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதா வை ஆதரிக்கிறேன்.

* **திரு. எம். ராஜகோபால் பிள்ளை:** கனம் உப தலைவர் அவர்களே, நான் பொதுவாக இந்தச் சபையில் பேசுவதே வழக்க மில்லை. காரணம், பேசுவதில் பயன் இல்லை என்பதற்காக அல்ல. திரு. அன்பழகன், திரு. பாலசுப்ரமணிய அய்யர், டாக்டர் ஹண்டே போன்றவர்கள் இந்த சபையில் இருக்கும் போது நடவடிக்கைகளைப் பார்த்து அதில் உள்ள குற்றங் குறைகளை ஆராய்ந்து அவற்றை அவர்கள் களைவார்கள், பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவார்கள், அவற்றை எல்லாம் நான் தெரிந்துகொண்டு போகலாம் என்பதுதான் என்னுடைய நோக்கம். எப்போதும் மற்றவர்களைப் பார்த்துக் கற்றுக்கொள் வதுதான் நல்லது. மற்றவர்களுக்குக் கற்பிப்பது மிகவும் கடினம். இந்த வரியைப் பற்றி எல்லாம் எல்லோரும் அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். நான் பொதுவாக என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். வரி விதிக்காத அரசாங்கம் என்று ஒன்று இருந்தால் அது அரசாங்கமே இல்லை. அப்படி வரி விதிக்காத ஒரு அரசாங்கம் என்பது இதுவரையில் எங்குமே இருந்ததும் இல்லை. இனி இருக்கப்போவதும் இல்லை. குறிப்பாக எல்லோரும் இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அது மட்டுமல்ல. எந்த முறையில் வரி விதிக்கவேண்டுமென்பது எல் லோரும் சிந்திக்கவேண்டியது அவசியம். இப்போது நாம் விதித் திருக்கிற வரி இருக்கிறதல்லவா? இந்த வரி போட்டிருக்கிறோமே . . .

(மன்றத்தில் உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கின்றனர்)

திரு. எம். ராஜகோபால் பிள்ளை: நீங்களே பேசிக்கொண்டிருந் தால் நான் நிறுத்திக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நீங்கள் பேசலாம். மற்ற வர்கள் பேசுவதைக் கவனிக்கக்கூடாது. அதுதான் கவுன்சில் சம்பிரதாய முறை.

5-50 p.m. **திரு. எம். ராஜகோபால் பிள்ளை:** ஏதோ 1¾ கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இதற்காக சிலர் அழுது, அங்கலாய்த்து, ஆர்ப்பரித்து அரட்டி, மிரட்டுகிறார்கள்.

திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, அங்கத்தினர் 'மிரட்டுகிறார்கள்' என்றார். சர்க்காரை யாரும் மிரட்டவில்லை. நியாயத்தைத்தான் எடுத்துச் சொல்கிறோம்.

டெபுடி சேர்மன்: அங்கத்தினர் தொடர்ந்து பேசலாம். மற்ற வர்களும் பேச வேண்டியிருக்கிறது. அதற்கும் நேரம் வேண்டும்.

திரு. எம். ராஜகோபால் பிள்ளை: சரி, வரி விதிப்பை நான் ஆதரிக்கிறேன். விவசாயிகளுக்கு நாம் இப்போது வரி விதிக்கவே இல்லை. ஆனால் விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு இருக்

12th November 1965] [திரு. எம். ராஜகோபால் பிள்ளை]

கிற எத்தனையோ ஆட்கள் ஊர்களில் இருக்கிறார்கள். இன்றைக்கு எத்தனையோ கம்பெனிகள் இந்த ஊரில் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் கூட விவசாயிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்*** அவர்கள் எல்லாம் தங்கள் கள்ளப்பணத்தை எப்படி எங்கே முடக்குவது என்று எண்ணிக்கொண்டு தங்களை விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு ***

அவர்கள் எல்லாம் தங்கள் கள்ளப் பணத்தை முடக்குவதற்காக நிலங்களை வாங்கி விவசாயம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் விவசாயிகள் அல்ல. அவர்களுக்கு வரி விதிப்பதில் தவறில்லை என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். ஏனென்றால் என்னுடைய மேடைப் பேச்சுக்கும் இங்கே பேசுவதற்கும் ஒத்து வராது.

* திரு. ஏ. சுப்ரமணியம் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் நில சட்டத் தீர்வை சம்பந்தமாகவும், நீர் வரி சம்பந்தமாகவும் வந்திருக்கும் மசோதாவை நான் எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன். ஏனெனில், வரி போடவேண்டியதுதான். வரி போடாத அரசாங்கமே உலகத்தில் இருக்கமுடியாது என்பதும் உண்மை, ஆனால் பாரதம் அந்த மாதிரி இருக்கக்கூடாது எனக்கு எவ்வளவு சுமையை சுமக்க சக்தி இருக்கும் என்பதை நிர்ணயித்து என் தலைமீது பாரம் வைக்கவேண்டும். நமது ரெவின்யூ அமைச்சர் இருக்கிறாரே அவர் எவ்வளவு சுமப்பாரோ அதற்குத் தக்கபடி அவருக்கு வைக்கவேண்டும். அவர் தலை மீது வைப்பதுபோல என்னுடைய தலையில் வைத்தால் இப்போது இருக்கும் நிலைமைக்கு என்னால் தாளமுடியுமா என்று பார்க்க வேண்டும். பட்டாதாரர்களின் தாரதம்யம் அறிந்து வரி போட வேண்டியதுதான். ஆனால் இப்போது காண்டு வெட்டு போட்டிருக்கிறது. காரணம் என்ன? மழையில்லை. சேலத்தில், மேட்டூரில் சென்ற வருஷம் இந்த நாட்களில் 120, 122 அடி நீர்மட்டம் இருந்தது. இப்போது 20 அடிக்கும் குறைந்திருக்கிறது. இந்த நிலைமையில் இப்போதுதானா விவசாயிகளுக்கு இந்த வரியைப் போடவேண்டும்? கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டாமா? நல்ல மழை பெய்து அணைக்கட்டுகளில் எல்லாம் நிறைய தண்ணீர் இருந்து விவசாயிகளுக்கு வருமானம் பெருகி இருந்தால் இந்த 25 சதவிகிதம் என்ன, 50 சத விகிதம் கூட போடலாமே. யார் போடவேண்டாம் என்று சொன்னார்கள்? ஆகையால் அதை இப்போது போடுவதை எதிர்க்கிறார்களே தவிர வரி போடக் கூடாது என்று சொல்லவில்லை. இப்போது போடப்பட்டிருக்கும் இந்த வரியானது இப்போது வேண்டாம். இப்போது ஜனங்களுக்கு பெரிய கஷ்டமான நிலைமை இருந்து வருகிறது. இப்போது வரி வஜா செய்யவேண்டிய காலம். மழை இல்லாததால், விளைச்சல் இல்லாததால் விவசாயிகளுக்கு வருமானம் இல்லாததால் ஏற்

*** Expunged as ordered by the Chair.

கனவே சரியான விளைவு இல்லாமல் இருப்பதால் வரியை இப்போது வஜா செய்ய வேண்டும். அதை விட்டு வரி போடுகிறேன் என்று சொன்னால் அவ்வளவு உசிதமாக இருக்காது ஆகையால் இந்த மசோதாவை நம்முடைய அரசாங்கம் சற்றுக் கவனித்து தீர புனராலோசனை செய்து மறுபடி கீழ் சட்டசபைக்கு அனுப்பி நிறுத்தி வைப்பது அல்லது கைவிடுவது நல்லது என்ற யோசனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி, வணக்கம்.

* **திரு. க. அன்பழகன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரி உயர்வு குறித்துப் பேசிய கனம் அங்கத்தினர்களில் பெரும்பாலோர் இதை எதிர்த்திருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் இந்த அரசாங்கம் வரி விதிக்கக்கூடாதென்ற கொள்கை உடையவர்கள் அல்லர். எதிர்க் கட்சியினர் எப்போதுமே வரியை எதிர்ப்பவர்கள், அதனால் இந்த வரியையும் எதிர்க்கிறார்கள் என்று மதிப்பிற்குரிய ஆளுங்கட்சி அங்கத்தினர் ஒருவர் கூறினார். ஆனால் இந்த வரியை எதிர்க் கட்சியினர் மட்டுமின்றி ஆளும் கட்சியினரும் எதிர்த்திருக்கிறார்கள். இந்த மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியாரும் அதற்கு முன்னரே அமைச்சராக இருந்தவரான செட்டிநாடு அரசரும் இதை எதிர்த்திருக்கிறார்கள். ஆகையால் இந்த வரியை, வரி என்றாலே எதிர்க்க வேண்டுமென்பதற்காக நாங்கள் எதிர்க்கவில்லை. எதிர்க் கட்சியினர் வரியை எப்போதுமே எதிர்ப்பவர்கள் அல்லர் என்பதற்கு இரண்டு சான்றுகள் காட்ட விரும்புகிறேன். ஒன்று, விவசாய வருமான வரி இந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டபோது அது அவசியம் என்று நான் சார்ந்திருக்கும் எதிர்க் கட்சி அதை ஏற்றுக்கொண்டதுடன் அதை ஆதரித்தும் இருக்கிறது; அது தாங்கக் கூடியவர்கள் மீது விதிக்கப்படும் வரி என்பதால் அதை எங்கள் கட்சி ஒத்துக்கொண்டது. மற்றொன்று, துணை மானிய கோரிக்கையில் 8 கோடி ரூபாய்க்கு வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. 1½ கோடி ரூபாய் அளவுக்கு விதிக்கப்படும் இந்த வரியைத் தவிர 6½ கோடி ரூபாய்க்கான வேறு வரிகள் மற்ற மசோதாக்களில் வருகின்றன; அவற்றை நாங்கள் முற்றிலும் எதிர்க்கவில்லை. அவை சம்பந்தமான சில திருத்தங்கள் தெரிவிக்கப்படுமே தவிர அவைகள் எங்களால் அடியோடு எதிர்க்கப்பட மாட்டா. அந்த வரிகள் கேடானவை என்று நாங்கள் அறிவிக்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், என் மதிப்பிற்குரிய நண்பர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. நடராஜன் தெரிவித்தது போல நெருக்கடி நிலையை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இந்த அரசாங்கத்தார் கூட நெருக்கடி நிலைகாரணமாகத் தான் இந்த வரியைப் போடத் துணிந்திருக்கிறார்கள் என்பது என் கருத்து. இல்லாவிட்டால் இவர்களுக்கு இவ்வளவு பெரிய துணிச்சல் ஏற்பட்டிருக்க முடியாது. இவர்களுக்கு இவ்வளவு பெரிய துணிச்சல் ஏற்பட்டிருக்க முடியாது என்று நான் சொல்லும்போது நேர்முகமாக யாரையும் குறிப்பிட்டு நான் அவ்வாறு சொல்லவில்லை; ஆளும் கட்சியைக் குறித்துத் தான் நான் அவ்வாறு சொல்கிறேன்.

12th November 1965] *[திரு. க. அன்பழகன்]*

ஒரு பக்கத்தில் மத்திய அரசு வரி விதிப்பை வற்புறுத்துகிறது. இன்னொரு பக்கத்தில் போர் நெருக்கடி இருக்கிறது. எனவே இந்த வரி கொண்டுவரப்படுகிறது. இந்த வரி விதிப்பு விவசாயி களுக்குப் பெரிதும் பாதகமானது என்று அனைவராலும் எண்ணப் படுகிறது. இது இந்தத் திங்களில் வராமல் 4, 5 திங்கள் கழித்து வந்தால் அப்போதுள்ள வெட்பதட்ப நிலைகாரணமாக அப்போது இதற்கு எதிர்ப்பு ஏற்படாமல் இருக்கலாம். ஆனால் இன்றையச் சூழ்நிலையில் நிலத்தின்மீது இப்போதுள்ள வரியே அதிகமானதாக இருக்கிறது என்று கருதப்படுகிறது. நான் மற்றவர்களைப் போல விவசாயிகளின் தொல்லைகளை இங்கே விளக்கிக்காட்ட விரும்ப வில்லை. அவர்களுடைய குறைகள் தெரிந்தும் அரசாங்கம் இது காறும் அவைகளை நீக்கவில்லை. இந்நிலையில் இந்த வரிவிதிப்பு அவர்களுடைய உற்சாகத்தை அழிக்கும் என்பதாலேயே இதை எதிர்க்கிறேன். மக்களின் வாழ்க்கை நிலை—வருமான நிலவரச் சூழ்நிலையைக் கவனித்து வரி விதிக்கப்பட வேண்டும். அப்படிப் பார்க்கும்போது இந்த வரிவிதிப்பு 1965-ஆம் ஆண்டு ஜூலையி லிருந்து மேற்கொள்ளப்படும் என்பதற்குப் பதிலாக 1966-ஆம் ஆண்டு ஜூலையிலிருந்து மேற்கொள்ளப்படும்; அது வரையில் இதுதள்ளிவைக்கப்படும் என்று சொன்னாலாவது இன்று மழை யில்லாது வருந்தும் உழவர்கட்கு நன்றாக இருக்கும்; அல்லது, காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் ஒருவர் சொன்னதுபோல 'நெருக் கடி காரணமாகத்தான் இந்த வரியைப் போடுகிறோம் என்பார்க ளானால், நெருக்கடிக்குப் பிறகு இதை எடுத்துவிடுவோம்' என்று உறுதி கூறினால் நன்றாக இருக்கும்.

இப்போது விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த வரி இப்போது அமலுக்கு வராது, 1966-ஆம் ஆண்டு ஜூலை யில் தான் அமலுக்கு வரும் என்று சொல்லி, அதற்குள் மழையும் வந்தால் விவசாயிகளுக்கு அவ்வளவு தொல்லை இருக்காது. வரி விதிப்பிற்கான காரணங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அக் காரணங்களில் நெருக்கடி நிலை ஒன்று; 4-வது ஐந்தாண்டுத் திட்டத் தில் செய்தே தீர வேண்டிய மூன்றாவது திட்டத்தில் தொடங்கிய வேலைகளைப் பூர்த்தி செய்வது மற்றொன்று. துணை மானிய கோரிக்கையின்படி இன்னும் 6½ கோடி ரூபாய்க்கு வரி விதிக்க மசோதாக்கள் இருக்கின்றன. இந்த 6½ கோடி ரூபாயை அரசாங் கம் முழுவதும் பெற முடியும். 1½ கோடி ரூபாய்க்கான வரிவிதிப் பிற்குத் தான் வலுவான எதிர்ப்பு இருக்கிறது. மேலும் இந்த அர சாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் இன்று 160 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கிறது. இவ்வளவு வருமானம் உடைய இந்த அரசாங்கம் இக்கட்டான நிலை இருக்கிறது என்பதற்காக விவசா யத் துறையில் உணவு உற்பத்தி செய்யவேண்டியவர்களுக்கு இம் மாதிரி வரி விதிக்கக்கூடாது. இந்த வரி விதிப்பு அந்த மொத்த வருமானத்தில் 1.6 சதவிகித அளவிற்குத்தான் வருகிறது. இப்படிப்பட்ட இந்த வரிவிதிப்பை அரசாங்கம் இப்போதும் கை விடலாம். 6-00 p.m.

[திரு. க. அன்பழகன்] [12th November 1965

மேலும், வியாபாரிகள் பலர் வரி கொடுக்காமல் ஏமாற்றுகிறார்கள் என்பதால் அதைத் தடுக்க விற்பனை வரிச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரவிருந்த இந்த அரசாங்கம் பொறுக்குக் குழு கூடிய பின்னர், வணிகர்கள் இனிமேல் தாங்கள் சரிவர வரி செலுத்துவதாகக் கூறியதன் பேரில், அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருவதைக் கைவிட்டுள்ளது; அந்தத் திருத்தத்தை அரசாங்கம் ஒத்திவைத்திருக்கிறது என்றுகூட சொல்ல முடியாது. இந்த நெருக்கடியில் வியாபாரிகளின் ஒத்துழைப்புத் தேவை என்பதால் அந்தத் திருத்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் ஒத்திவைக்குமானால், விவசாயிகள் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய அரசு இந்தப் புது வரியை இப்போது கொண்டுவருவது எவ்வகையிலும் நல்லதல்ல, முறையுமல்ல.

வரி குறித்த அடிப்படையான கருத்து சம்பந்தமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். வரியை, தாங்கக்கூடியவர்களுக்குத் தாங்கக்கூடிய சமயத்தில் விதிக்கவேண்டும். வரியைத் தாங்கக்கூடியவர்களுக்கே கூட அவர்கள் கஷ்ட நஷ்டமடைந்துள்ள சமயத்தில் விதிக்கக்கூடாது. சிலருடைய பெயரைச் சொல்லி அப்படிப்பட்டவரிடம் கறுப்புப் பணம் இருப்பதாக ஒரு கனம் அங்கத்தினர் கூறினார். அவரிடம் கறுப்புப் பணம் இருந்தபோது அந்தப் பணத்தை அரசாங்கம் கைப்பற்றியிருக்கவேண்டும். அந்தப் பணம் நிலமாக மாறிவிட்டது என்பதற்காக அந்த நிலத்திற்காக மற்றவர்களுக்கெல்லாம் நிலத்தின் மீது சர்சார்ஜ் போடுவதாகச் சொன்னால், அது சரியாகாது. செல்வந்தர்கள் எல்லோரும் செல்வந்தர்களாகவே இருக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. நாட்டில் பொருட்செல்வம் மக்கள் அனைவருக்கும் பயன்பட அவர்களுடைய செல்வம் இறங்கத்தான் வேண்டும். இந்த வரி எல்லா விவசாயிகளையும் பாதிக்கிறது. 10 ஏக்கருக்குக் குறையாத அளவு நிலமுள்ளவர்களுக்குத்தான் இந்த சர்சார்ஜ் என்று அரசாங்கம் சொல்லுமா ? 10 ரூபாய்க்கு குறைவாக வரி கட்டுபவர்களுக்கு விதிவிலக்கு உண்டு என்று அரசாங்கம் சொல்லுமா ? அப்படிக் கூறாதவரையில் இந்த வரி எல்லா விவசாயிகளையும் பாதிப்பதால் இதை இப்போது கொண்டுவருவது முறையல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

மற்றொன்று சொல்ல விரும்புகிறேன். மிகப் பழங்காலத்தில் இருந்தே நில அடிப்படையில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அது பழைய முறை. இக்காலத்தில் வருமான அடிப்படையில் வரி பெறப்படுகிறது. விற்பனை வரி போன்று வியாபார அடிப்படையில் வரி முறை இன்று அமைந்தாலும் எதிர் காலத்தில் அரசாங்கத்தின் வருமானம் பெருக வேண்டுமானால் அது பெருகும் தொழில்களிலிருந்துதான் வரியை வாங்க வேண்டும். இதற்காக, தொழில்களுக்கெல்லாம் அதிக வரி போட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வளரும் தொழில்கள் மூலம், அதற்கான வரி மூலமுமே அரசாங்கம் வருமானம் காண வேண்டும். வியாபாரத்தையும் தொழிலையுமே வரிக்குரியவையாகக் கருத வேண்டும். ஆனால் விவசாயத்திற்கு இன்னும் வரி விதிக்கிறோம்' என்று சொல்வது இக்கால நிலையில் சரியல்ல.

12th November 1965] [திரு. க. அன்பழகன்]

காங்கிரஸ் இயக்கம் மகாத்மா காந்தியின் அடிச் சுவட்டில் செல்லும் இயக்கம், என்று கூறப்படுகிறது. அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 'விவசாயிக்கு இன்னும் புது வரி போடுகிறோம்' என்பது நியாயமல்ல. விவசாயிகளுக்கு வரி போடுவதால் அவர்கள் உணவு உற்பத்தி செய்வதில் உற்சாகம் அடைய மாட்டார்கள். ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமாள் கோயிலைப் புதுப்பிக்க 50 லட்ச ரூபாய் வசூலிக்கலாம் என்பதாகவும் அதற்காக ஒரு குழு அமைக்கப்படுவதாகவும் அண்மையில் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். நாட்டில் இந்த அளவிற்கு பொருள் சேர்க்கும் வாய்ப்பு இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது. எனவே அரசாங்கத்திற்கு நிதி தேவையானால், கோயில்களிலிருந்து முறையாக நிதி கேட்டால் நிறையப் பணம் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

போர் முனையில் வெற்றியடைய வேண்டியது அவசியம் என்பது போன்றே ஏர் முனையில் வெற்றியடைய வேண்டியதும் அவசியம் என்று ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறினார். இந்தியாவின் பிரதமரும், போர்முனையாலும் ஏர்முனையாலும் வெற்றி காண்பது நமது கடமை என்றே கூறினார். பழங்காலத்தில் ஒரு கவிஞர் மன்னன் ஒருவனைப் பார்த்து "மன்னவனே, நீ பெறுகிற வெற்றி உன் படை வீரர்கள் பெற்ற வெற்றியல்ல; நீ போர்க் களத்தில் பெற்ற வெற்றி நீ பெற்ற வெற்றியுமல்ல; அது உன் ஆற்றலினால், போர்த்திறத்தால் பெற்ற வெற்றி அல்ல, அது உன் படை வீரர்களை வாழ வைக்கிற உழவர்கள் ஏர் முனையில் எய்திய வெற்றி" என்று கூறினார். அந்த அளவு ஏர் முனையில் காட்டப்படும் உழைப்பால் அவர்கள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருளே—போர் முனை வெற்றிக்கே அடிப்படை என்பதை இதனால் உணரலாம். ஏர் முனையில் உள்ளவர்கள் அவர்களுக்கு விதிக்கப்படும் வரியைக் கூட கண்ணீர் சிந்தியவாறே செலுத்துவார்கள். ஆனால் அவர்களுக்கு மனக் கசப்பு ஏற்படுத்துவது உண்மையிலேயே நல்லதல்ல. கனம் அங்கத்தினர் திரு. தியாகராமசாமி "வரி போடுவதை நான் அதிகமாக எதிர்க்க விரும்பவில்லை" என்று சொன்னாரே தவிர வரவேற்பதாக அல்ல. இந்த 6-07 p.m. வரியைப் பொறுத்தவரையில், இந்த மன்றத்தில் கூட்டுக் கருத்து 'கான்ஸென்ஸஸ் அஃப் ஒபினியன்' என்ன என்று பார்த்தால், இது கூடாது என்பதுதான். 'இதை மனதார வரவேற்கிறேன்' என்று இந்த அவையிலே உள்ள யாரும் சொல்லவில்லை. 'மக்கள் செலுத்துவார்கள் எங்கே போய்விடுவார்கள். வரியைப் போடுங்கள்' என்று ஒருவர் மட்டும் கூறினார். மற்றவர்கள் எல்லோரும் 'இது இந்த நேரத்திற்கு ஏற்றதல்ல' என்று சொன்னார்கள். எனவே, கனம் அமைச்சர் அவர்கள், அவருக்குச் சுதந்திரம் இருக்குமானால், இந்த அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை கவனித்து, இந்த வரி இன்றியமையாததென்று அவர் துணிந்தால் '1966-ம் ஆண்டு ஜூலையிலிருந்து தான் இந்த வரி இயங்கும்' என்று தெரிவிக்கட்டும்; அல்லது உண்மையிலேயே போர் நெருக்கடி காரணமாகத்தான் இந்த வரி என்றால் 'நெருக்கடி நீங்கிய பிறகு இந்த சர்சார்ஜ் வரி

நீக்கப்படும்' என்றுவது அவர் உறுதி சொல்லட்டும். எவ்வாறு யினும், மழையின்றி ஆற்று நீரின்றி வயல் வெடித்துக் கிடக்கும் இந்த நேரத்தில் — இந்த வரியைக் கைவிட முன்வரட்டும். இவற்றில் எது குறித்துமே தெளிவு இல்லாது இருக்குமானால் தயவுசெய்து இந்த மசோதாவை நிறைவேற்றுது நிறுத்தி வைக்குமாறு அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

6-07 p.m. DEPUTY CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

VI—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

* 272. *Notification issued with G.O. Ms. No.* 1790, *Health, dated* 21st *August* 1965 *making amendments to the rules relating to the enforcement of vaccination in Municipal areas.* [*Laid on the Table of the House under Section* 304 (d) *of the Madras District Municipalities Act,* 1920 (*Madras Act V of* 1920).]

* 273. *Notification issued with G.O. Ms. No.* 3029, *Home, dated* 25th *August* 1965 *exempting from payment of tax for the vehicle bearing registration No. MSS.* 4922 *belonging to the World Health Organisation and assigned to the Indian Council of Medical Research, Infectious Diseases Hospital, Madras.* [*Laid on the Table of the House under Section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

B. Reports, notifications and other papers.

* 52. *Report of the Select Committee on the Madras General Sales Tax (Second Amedment) Bill,* 1965 (*L.A. Bill No.* 20 *of* 1965).

* 53. *Statement of Resources (English and Tamil)—Presented by the Hon. Chief Minister to the Madras Legislative Assembly on* 3rd *November* 1965.

*** Laid on the Table of the House on 8th November 1965.**

12th November 1965]

Appendix I.

[*Vide* answer to Starred Question No. 207 on page 278]

Statement showing district-wise particulars of the number of bus permits surrendered during the period from 1st April 1960 to 31st December 1964 and the reasons there for :—

Serial number and district. (1)	Number of permits surrendered. (2)	Reason. (3)	
1. Chingleput ..	Nil.	..	
2. Coimbatore ..	33	(*a*) Due to disposal of Writ Petitions.	4
		(*b*) Due to uneconomic operation.	4
		(*c*) Due to lapse of the permits.	4
		(*d*) Spare bus permits surrendered.	21
			33
3. Kanyakumari ..	16	(*a*) Due to modification of route.	12
		(*b*) Due to liquidation of company.	4
			16
4. Madras		No stage carriage permits were issued to private operators as the City routes are operated by the Madras State Transport Department.	
5. Madurai	3	Due to uneconomic operation.	
6. Nilgiris	9	(*a*) Due to uneconomic operation.	4
		(*b*) Spare buses not required.	5
			9

[12th November 1965

Serial number and district. (1)	Number of permits surrendered. (2)	Reason. (3)	
7. North Arcot ..	18	Reason not known.	
8. Ramanathapuram.	7	Due to uneconomic operation.	
9. Salem	1 (jeep stage carrige).	Due to uneconomic operation.	
10. South Arcot ..	Nil.	..	
11. Thanjavur ..	5	(a) Due to uneconomic operation.	1
		(b) Spare buses not required.	3
		(c) For want of chassis parts.	1
			5
12. Tiruchirappalli ..	3	(a) Due to uneconomic operation.	1
		(b) Due to termination of outagency contract at Pudukottai.	2
			3
13. Tirunelveli ..	8	Due to uneconomic operation.	

APPENDIX II.

[*Vide* item VI (1) on page 18.]

L.A. Bill No. 43 of 1965.

(As passed by the Assembly.)

A Bill to provide for the authorization of appropriation of moneys out of the Consolidated Fund of the State to meet the amounts spent on certain services during the financial year ended on the 31st day of March 1963, in excess of the amounts authorized or granted for the said services.

BE it enacted by the Legislature of the State of Madras in the Sixteenth Year of the Republic of India, as follows :—

1. *Short title.*—This Act may be called the Madras Appropriation (No. 5) Act, 1965.

2. *Issue of Rs.* 1,10,88,406 *out of the Consolidated Fund of the State for the financial year ended on the* 31*st March* 1963.—The sums specified in column (5) of the Schedule amounting in the

12th November 1965]

aggregate to the sum of one crore, ten lakhs, eighty-eight thousand, four hundred and six rupees shall be deemed to have been authorized to be paid and applied from and out of the Consolidated Fund of the State to meet the amonnts spent for defraying the charges in respect of the services and purposes specified in column (2) of the Schedule during the financial year ended on the 31st day of March 1963, in excess of the amounts authorized or granted for these services and purposes for that year.

3. *Appropriation.*—The sums deemed to have been authorized to be paid and applied from and out of the Consolidated Fund of the State under this Act shall be appropriated and shall be deemed to have been appropriated for the services and purposes specified in the Schedule in relation to the financial year ended on the 31st day of March 1963.

THE SCHEDULE.

(*See* Sections 2 and 3.)

Demand number.	*Services and purposes.*	*Sums* — *Voted by the Legislative Assembly.*	*Sums* — *Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
II	Motor Vehicles Acts—Administration.	21,034	..	21,034
VI	State Legislature.	..	650	650
IX	District Administration and Miscellaneous.	..	23,357	23,357
X	Administration of Justice.	38,111	..	38,111
XI	Jails	6,99,885	..	6,99,885
XIV	Medical	12,09,907	..	12,09,907
XXII	Khadi	7,780	..	7,780
XXIII	Community Development Projects, etc.	10,32,894	..	10,32,894
XXVI	Irrigation ..	17,28,622	..	17,28,622
XXVII	Public Works—Works.	45,11,513	1,473	45,12,986
XXVIII	Public Works—Establishment and Tools and Plant.	2,53,539	..	2,53,539
XXX	Road Transport Schemes.	2,45,838	..	2,45,838

[12th November 1965

Demand number.	Services and purposes.	Sums: Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
XXXII	Pensions ..	2,00,587	84,174	2,84,761
XXXIII	Miscellaneous ..	..	2,46,325	2,46,325
XXXVI	Other Miscellaneous Contributions and Assignments.	4,23,942	..	4,23,942
XXXVIII	Capital Outlay on Public Health.	2,28,526	..	2,28,526
XLIII	Capital Outlay on Road Transport Schemes.	..	4	4
XLV	Commuted Value of Pensions.	..	1,30,245	1,30,245
	Grand total ..	1,06,02,178	4,86,228	1,10,88,406

I certify that this is a Money Bill.

S. CHELLAPANDIAN,
Speaker, Madras Legislative Assembly.

FORT ST. GEORGE,
MADRAS-9,
11th November 1965.

APPENDIX II.

[*Vide* Item VI (1) on page 290]

L.A. Bill No. 44 of 1965.

(As passed by the Assembly.)

A Bill to provide for the appropriation of certain further moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year which commenced on the 1st April 1965.

BE it enacted by the Legislature of the State of Madras in the Sixteenth Year of the Republic of India, as follows :—

1. *Short title.*—This Act may be called the Madras Appropriation (No. 6) Act, 1965.

2. *Supplementary appropriation out of the Consolidated Fund for the financial year which commenced on the 1st April 1965.*—The State Government may appropriate, out of the Consolidated Fund of the State, for the financial year which commenced on

12th November 1965]

the 1st April 1965, a further sum not exceeding seven crores, forty-four lakhs, sixty-three thousand and nine hundred rupees being moneys required to meet—

(*a*) the supplementary grants made by the Madras Legislative Assembly for that period, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the supplementary expenditure charged on the Consolidated Fund of the State for that period, as set forth in column (4) of the Schedule.

THE SCHEDLE.

Demand number.	*Services and purposes.*	*Sums not exceeding* — *Voted by the Legislative Assembly.*	*Charged on the Consolidated Fund of the State.*	*Total.*
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
I	Land Revenue Department.	22,700	..	22,700
II	Motor Vehicles Acts—Administration.	65,600	..	65,600
III	General Sales Tax and Other Taxes and Duties—Administration.	56,200	..	56,200
VII	Elections ..	20,00,000	..	20,00,000
VIII	Head of State Ministers and Headquarters Staff.	1,55,600	..	1,55,600
IX	District Administration and Miscellaneous.	6,00,000	..	6,00,000
X	Administration of Justice.	44,800	..	44,800
XII	Police	5,13,700	..	5,13,700
XIII	Education ..	1,87,900	..	1,87,900
XIV	Medical ..	3,42,400	..	3,42,400
XV	Public Health ..	80,100	..	80,100
XVI	Agriculture ..	78,08,900	..	78,08,900
XVII	Fisheries ..	11,12,100	..	11,12,100
XVIII	Animal Husbandry.	3,95,100	..	3,95,100
XIX	Co-operation ..	13,39,000	..	13,39,000
XX	Industries ..	11,50,100	..	11,50,100
XXV	Welfare of the Scheduled Tribes, Castes and other Backward Classes.	50,000	..	50,000

[12th November 1965

Demand number.	Services and purposes.	Sums not exceeding: Voted by the Legislative Assembly.	Charged on the Consolidated Fund of the State.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
		RS.	RS.	RS.
XXVI	Irrigation	300		300
XXVII	Public Works—Works.	2,46,300	..	2,46,300
XXVIII	Public Works—Establishment and Tools and Plant.	7,01,900	..	7,01,900
XXIX	Public Works—Grants-in-aid.	6,97,700	..	6,97,700
XXX	Road Transport Scheme.	15,00,000	1,00,000	16,00,000
XXXIII	Miscellaneous ..	19,42,600	..	19,42,600
XXXIII-A	National Emergency.	6,00,000	..	6,00,000
XXXVI	Other Miscellaneous Compensations and Assignments.	13,53,000	..	13,53,000
XXXIX	Capital Outlay on Agriculture.	..	65,300	65,300
XLI	Capital Outlay on Industrial Development.	5,97,500	2,37,200	8,34,700
XLII	Capital Outlay on Irrigation.	4,20,600	..	4,20,600
XLIII	Capital Outlay on Public Works.	50,47,200	7,300	50,54,500
XLIV	Capital Outlay on Road Transport Schemes.	6,00,000	..	6,00,000
XLVII	Capital Outlay on Schemes of Government Trading.	24,00,100	..	24,00,100
XLVIII	Loans and Advances by the State Government.	4,20,22,700	..	4,20,22,700
	Grand Total ..	7,40,54,100	4,09,800	7,44,63,900

I certify that this is a Money Bill.

FORT ST. GEORGE,
MADRAS-9,
11th November 1965.

S. CHELLAPANDIAN,
Speaker, Madras Legislative Assembly.

APPENDIX IV.

[*Vide* item VI (4) on page 35.]

L.A. Bill No. 30 of 1965.

(As passed by the Assembly.)

A Bill to provide for the levy of surcharge on land revenue— and on water-cess in the State of Madras.

BE it enacted by the Legislature of the State of Madras in the Sixteenth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras Land Revenue and Water-Cess (Surcharge) Act, 1965.

(2) It shall be deemed to have come into force on the 1st day of July 1965.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(1) " fasli year " means the year commencing on the 1st day of July;

(2) " Government " means the State Government;

(3) " inam land " shall have the meaning assigned to it in clause (*d*) of section 2 of the Madras Inams (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956);

(4) " landholder " means any holder of land under ryotwari settlement and includes,—

(i) any inamdar liable to pay full assessment under the Madras Inams (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956); and

(ii) any person liable to pay land revenue under—

(*a*) section 23 of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), or

(*b*) section 21 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963), or

(*c*) section 15 of the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963), or

(*d*) section 12 of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), or

(*e*) section 12 of the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1964 (Madras Act 31 of 1964);

(5) " land revenue " means—

(i) in the case of any land in respect of which a ryotwari settlement is in force, the ryotwari assessment payable;

[12th November 1965

(ii) in the case of any inam land on which full assessment of revenue has been levied under the Madras Inams (Assessment) Act, 1956 (Madras Act XL of 1956), such assessment;

(iii) in the case of any land in respect of which a ryotwari settlement effected—

(a) in pursuance of section 22 of the Madras Estate (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948), has not been brought into force, the land revenue payable under section 23 of that Act;

(b) in pursuance of section 20 of the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) has not been brought into force, the land revenue payable under section 21 of that Act;

(c) in pursuance of section 14 of the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963), has not been brought into force, the land revenue payable under section 15 of that Act;

(d) in pursuance of section 16 or section 16-A of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), has not been brought into force, the land revenue payable under section 12 of that Act pending such ryotwari settlement;

(e) in pursuance of section 11 of the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1964 (Madras Act 31 of 1964), read with the Madras (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 (Madras Act 30 of 1964), has not been brought into force, the land revenue payable under sub-section (2) of section 12 of the former Act pending such ryotwari settlement;

but does not include the additional assessment payable under the Madras Additional Assessment and Additional Water-Cess Act, 1963 (Madras Act 8 of 1963);

(6) "settlement notification" includes a resettlement notification;

(7) "water-cess" means the water-cess levied under—

(a) the Madras Irrigation Cess Act, 1865 (Madras Act VII of 1865);

(b) the Bhavani Reservoir Irrigation Cess Act, 1933 (Madras Act XVI of 1933); and

(c) the Mettur Canal Irrigation Cess Act, 1953 (Madras Act XVII of 1953);

but does not include the additional water-cess payable under the Madras Additional Assessment and Additional Water-Cess Act, 1963 (Madras Act 8 of 1963).

3. *Levy and collection of surcharge.*—In respect of every land assessed to land revenue or to water-cess or to both, there shall be levied and collected by the Government from the landholder

12th November 1965]

for every fasli year, a surcharge at the rate of twenty-five per centum of the land revenue or of the water-cess or of both, as the case may be, payable for the fasli year for that land.

4. *Assessing authority for surcharge on land revenue.*—Any officer of the Revenue Department not lower in rank than a Deputy Tahsildar and having jurisdiction may, after following such procedure as may be prescribed, assess the surcharge on land revenue under this Act. Such assessment shall, subject to the provisions of sections 7 and 9, be final.

5. *Assessing authority for surcharge on water-cess.*—(1) Any authority or officer competent to levy and collect the water-cess under the relevant Acts mentioned in clause (7) of section 2 and the rules made thereunder, may assess the surcharge on water-cess under this Act. Such assessment shall, subject to the provisions of section 8, be final.

(2) The procedure for the levy and collection of surcharge on water-cess shall be the same as the procedure for the levy and collection of water-cess under the relevant Acts mentioned in clause (7) of section 2 and the rules made thereunder.

6. *Re-assessment of surcharge in certain cases.*—(1) The surcharge assessed under this Act shall remain in force so long as the land revenue or the water-cess for the land remains the same.

(2) The authority or officer competent to levy surcharge under this Act may reassess the surcharge on land revenue or on water-cess, every time the land revenue or the water-cess for the land is revised. The provisions of this Act shall, as far as may be, apply in relation to such reassessment as they apply in relation to the assessment of the surcharge under this Act.

7. *Appeal against order of assessment of surcharge on land revenue.*—(1) Any person objecting to the amount of surcharge on land revenue assessed under section 4 or denying his liability to be assessed to surcharge on land revenue under this Act, may appeal against the assessment—

(i) where the assessment has been made by the Deputy Tahsildar in-charge of a sub-taluk or the Tahsildar in-charge of a taluk or range, to the Revenue Divisional Officer of the division concerned;

(ii) where the assessment has been made by the Revenue Divisional Officer of a division, to the Collector of the district concerned;

(iii) where the assessment has been made by the Collector of a district, to the Board of Revenue.

(2) The appeal shall be presented within a period of sixty days from the date of the service of the order of assessment or within such further time not exceeding ninety days as the appellate officer or authority referred to in sub-section (1) may, in his or its discretion, allow.

[12th November 1965

(3) An appeal under this section shall be heard in such manner as may be prescribed. In disposing of an appeal, the appellate officer or authority may—

(i) confirm, reduce, enhance or annul the assessment, or

(ii) set aside the assessment and direct the assessment to be made after such further inquiry as may be directed :

Provided that no enhancement of assessment shall be made under this section unless the appellant has been given a reasonable opportunity of being heard against such enhancement.

(4) The appellate officer or authority may, at the conclusion of the appeal, communicate the orders passed in the appeal to the assessee and to the officer who made the assessment.

(5) Any order passed in the appeal shall, subject to the provisions of section 9, be final.

8. *Appeal against order of assessment of surcharge on water-cess.*—(1) Any person objecting to the amount of surcharge on water-cess assessed under sub-section (1) of section 5, or denying his liability to be assessed to surcharge on water-cess under this Act, shall have the same right of appeal and revision as he has against an order of the appropriate authority levying water-cess under the relevant Acts mentioned in clause (7) of section 2 and the rules made thereunder.

(2) The procedure to be followed and the period of limitation in respect of such appeal or revision shall be the same as the procedure to be followed and the period of limitation in respect of an appeal or revision against an order of the appropriate authority levying water-cess under the relevant Acts mentioned in clause 7 of section 2 and the rules made thereunder.

9. *Revision by the Board of Revenue.*—The Board of Revenue may call for and examine the record of any officer or authority in respect of any proceeding under section 11, or in respect of any proceeding releating to surcharge under this Act (not being a proceeding in respect of which an appeal lies to the Board of Revenue), to satisfy itself as to the regularity of such proceeding or the correctness, legality of propriety of any decision or order passed thereon; and, if, in any case, it appears to the Board of Revenue that any such proceeding, decision or order should be modified, annulled, reversed or remitted for reconsideration it may pass orders accordingly :

Provided that the Board of Revenue shall not pass any order prejudicial to any party unless he has been given a reasonable opportunity of being heard.

10. *Surcharge recovered as land revenue.*—(1) The surcharge payable under this Act shall be deemed to be public revenue due on the land in respect of which a person is liable to pay surcharge and the land, the building thereon and its products shall be regarded as the security for the surcharge.

12th November 1965]

(2) The provisions of the Madras Revenue Recovery Act, 1864 (Madras Act II of 1864) and of the Madras City Land Revenue Act, 1851 (Central Act XII of 1851), as amended by the Madras City Land Revenue (Amendment) Act, 1867 (Madras Act VI of 1867), shall apply in relation to the payment and recovery of the surcharge payable under this Act in respect of any land as they apply in relation to the payment and recovery of the revenue due upon such land.

11. *Remission of surcharge.*—(1) Where on account of total or partial failure of crops, the land revenue or the water-cess has been remitted in respect of any land, the surcharge on land revenue or on water-cess, as the case may be, payable in respect of such land shall stand remitted by such amount which bears to the total surcharge the same proportion as the amount of land revenue or water-cess remitted in respect of such land bears to the total amount of land revenue or water-cess in respect of such land.

(2) If any question arises whether any person is entitled to remission of surcharge under sub-section (1) or regarding the extent of such remission, the question shall be decided by the prescribed authority and in the prescribed manner, and the decision of such authority on such question, all subject to the provisions of section 9, be final :

12. *Power to make rules.*—(1) The Government may make rules to carry out the purposes of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for—

(*a*) all matters expressly required or allowed by this Act to be prescribed;

(*b*) the unit for the purposes of assessment of surcharge under this Act;

(*c*) the production of documents; and

(*d*) the holding of inquiries and the enforcement of the attendance of persons at such inquiries and their examination, on both or affirmation.

13. *Power to remove difficulties.*—If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may, as occasion may require, by order, do anything which appears to them necessary for the purpose of removing the difficulty.

14. *Publication of rules and placing of rules and orders before the Legislature.*—(1) All rules made under section 12 shall be published in the *Fort St. George Gazette* and, unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(2) Every rule made under section 12 and every order made under section 13 shall, as soon as possible after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if,

[12th November 1965

before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or order or both Houses agree that the rule or order should not be made, the rule or order shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or order.

15. *Surcharge not to be taken into account for certain purposes.*—(1) Notwithstanding anything contained in this Act, the surcharge payable under this Act shall not be deemed to be land revenue or water-cess for the purposes of,—

(i) calculating stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899); or

(ii) calculating standard acre under the Madras Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955); or

(iii) calculating court-fees under the Madras Court-fees and Suits Valuation Act, 1955 (Madras Act XIV of 1955); or

(iv) assessment of local cess and local cess surcharge under the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958); or

(v) calculating standard acre under the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Madras Act 57 of 1961); or

(vi) calculating standard acre or the compensation payable under the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Madras Act 58 of 1961); or

(vii) calculating the additional assessment and additional water-cess under the Madras Additional Assessment and Additional Water-cess Act, 1963 (Madras Act 8 of 1963).

(2) Notwithstanding anything contained in this Act or in any other law for the time being in force, the surcharge payable under this Act shall not be taken into account for the purposes of payment of compensation under—

(*a*) the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 Madras Act XXVI of 1948), or

(*b*) the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963), or

(*c*) the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 27 of 1963), or

(*d*) the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963), or

(*e*) the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1964 (Madras Act 31 of 1964).

12th November 1965]

16. *Act to override other laws.*—Except as otherwise provided in this Act, the provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force, or any custom, usage or contract or decree or order of a Court or other authority.

17. *Act not to apply to certain areas in the State.*—(1) Subject to the provisions of sub-section (2), nothing contained in this Act shall apply to the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district.

(2) Notwithstanding anything contained in sub-section (1), the Government may, by notification, direct that the provisions of this Act shall apply to any of the areas specified in sub-section (1) with effect from such date as may be specified in such notification.

I certify that this is a Money Bill.

FORT ST. GEORGE,
MADRAS,
10*th November* 1965.

S. CHELLAPANDIAN,
Speaker, Madras Legislative Assembly.




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS